## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 2-7 - திவளும்[1]
### (திருவிடவெந்தை - தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமை கண்ட தாய் இரங்கும் பாசுரம்)

1108 * திவளும் வெண்மதி போல் திருமுகத்தரிவை * செழுங்கடல் அமுதினில் - பிறந்த
அவளும் * நின்னாகத்திருப்பதும் அறிந்தும் * ஆகிலும் ஆசை விடாளால் **
குவளையங் கண்ணி கொல்லியம் பாவை * சொல்லு நின் தாள் நயந்திருந்த
இவளை * உன் மனத்தால் என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை - எந்தை பிரானே! 1

1109 துளம்படு முறுவல் தோழியர்க்கு அருளாள் * துணை முலை சாந்து கொண்டு - அணியாள் *
குளம்படு குவளைக் கண்ணிணை எழுதாள் * கோல நல்மலர் குழற்கு - அணியாள் **
வளம்படு முந்நீர் வையம் முன் அளந்த * மாலென்னும் மாலின மொழியாள் *
இளம்படி இவளுக்கு என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை - பிரானே! 2

1110 சாந்தமும் பூணும் சந்தனக் குழம்பும் * தடமுலைக்கு அணியிலும் தழலாம் *
போந்த வெண் திங்கள் கதிர் சுட மெலியும் * பொரு கடல் புலம்பிலும் - புலம்பும் **
மாந்தளிர் மேனி வண்ணமும் பொன்னாம் * வளைகளும் இறை நில்லா * - என்தன்
ஏந்திழை இவளுக்கு என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை பிரானே! 3

1111 ஊழியில்[2] பெரிதால் நாழிகை என்னும் * ஒண் சுடர் துயின்றதால் என்னும் *
ஆழியும் புலம்பும் அன்றிலும் உறங்கா * தென்றலும் தீயினிற் கொடிதாம் **
தோழியோ! என்னும் துணைமுலை அரக்கும் * சொல்லுமின் என் செய்கேன்? - என்னும் *
ஏழை என் பொன்னுக்கு என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை - பிரானே! 4

1112 ஓதிலும் உன் பேர் அன்றி மற்றோதாள் * உருகும் நின் திருவுரு நினைந்து *
காதன்மை பெரிது கையறவுடையள் * கயல் நெடுங்கண் துயில் மறந்தாள் **
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது * தெள்ளியள் வள்ளி நுண்மருங்குல் *
ஏதலர் முன்னா என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை - பிரானே! 5

---
[1] இது கோவில் திருமொழி
[2] ஊழியின்

1113 தன் குடிக்கு ஏதும் தக்கவா நினையாள் * தடங்கடல் நுடங்கெயிலிலங்கை *
வன்குடி மடங்க வாளமர் தொலைத்த * வார்த்தை கேட்டு இன்புறும் -
மயங்கும் **
மின்கொடி மருங்குல் சுருங்க மேல் நெருங்கி * மென்முலை பொன் -
பயந்திருந்த *
என்கொடி இவளுக்கு என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை
பிரானே! 6

1114 உளங்கனிந்திருக்கும் உன்னையே பிதற்றும் * உனக்கன்றி எனக்கு -
அன்பொன்று இலளால் *
வளங்கனி பொழில்சூழ் மாலிருஞ்சோலை * மாயனே! என்று வாய் வெருவும் **
களங்கனி முறுவல் காரிகை பெரிது * கவலையோடு அவலம் சேர்ந்திருந்த *
இளங்கனி இவளுக்கு என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை -
பிரானே! 7

1115 * அலங்கெழு தடக்கை ஆயன் வாயாம்பற்கு * அழியுமால் என் உள்ளம் -
என்னும் *
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும் * போதுமோ நீர்மலைக்கு? என்னும் **
குலங்கெழு கொல்லி கோமளவல்லி * கொடி இடை நெடு மழைக் கண்ணி *
இலங்கெழில் தோளிக்கு என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை -
பிரானே! 8

1116 பொன்குலாம் பயலை பூத்தன மெந்தோள் * பொருகயற் கண்துயில் -
மறந்தாள் *
அன்பினால் உன் மேல் ஆதரம் பெரிது * இவ்வணங்கினுக்கு[3] உற்ற நோய் -
அறியேன் **
மின்குலா மருங்குல் சுருங்க மேல் நெருங்கி * வீங்கிய வனமுலையாளுக்கு *
என்கொலாம்? குறிப்பில் என் நினைந்திருந்தாய்? * இடவெந்தை எந்தை -
பிரானே! 9

1117 * அன்னமும் மீனும் ஆமையும் அரியும் ஆய * எம் மாயனே! அருளாய் *
என்னும் இன்தொண்டர்க்கு இன்னருள் புரியும் * இடவெந்தை எந்தை -
பிரானை **
மன்னு மாமாட மங்கையர் தலைவன் * மானவேல் கலியன் வாய் ஒலிகள் *
பன்னிய பனுவல் பாடுவார் * நாளும் பழவினை பற்றறுப்பாரே 10

**அடிவரவு:** திவளும் துளம் சாந்தம் ஊழியில் ஓதிலும் தன் உளம் அலம் பொன்
அன்னம் திரிபுரம்

[3] என் அணங்கினுக்கு